2006 ஜனவரி 17]

5—

நியாய விலைக் கடை

***30519—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், சின்னையா சத்திரத்திற்குப் புதிய அங்காடி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இந்த வினா தொடுக்கப்பட்ட காலம் 29-10-2002. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டபடி, புதுக்கோட்டை மாவட்டம், கூழியான்விடுதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தின்கீழ் சின்னையா சத்திரம் என்ற பகுதிநேர நியாய விலைக் கடை 173 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது என்கின்ற நல்ல தகவலைச் சொல்லி அமர்கிறேன்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய அடிப்படைத் தேவைகளை உணர்ந்துகொண்டு செயலாற்றிக்கொண்டிருக்கின்ற மிகச் சிறந்த அரசு, இந்த 5 ஆண்டுகளாக சிறப்பாகச் செயலாற்றுகிறது என்பதை எடுத்துக்காட்டுகின்ற வண்ணமாக, கோரிக்கையை நிறைவேற்றியதற்கு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் அம்மா அவர்களுக்குப் பணிவோடு தொகுதி மக்களுடைய சார்பிலே நன்றிகளைப் பணிவாக வைத்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய இந்தப் பொற்கால ஆட்சியில்தான் மகளிர் இன்றைக்கு எல்லாத் துறைகளிலும் முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, நியாய விலைக் கடைகளை நடத்துகின்ற அந்தப் பணியைக்கூட மகளிர் சுய உதவிக் குழுக்கள் மிகச் சிறப்பாக ஏற்று நடத்துகின்ற அந்தச் சிறப்பை ஊக்குவித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே, புதுக்கோட்டை மாவட்டத்திலே உள்ள நியாய விலைக் கடைகளிலே எத்தனை நியாய விலைக் கடைகள் மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலம் ஏற்று நடத்தப்படுகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய ஆணையின்படி, புதுக்கோட்டை மாவட்டத்தில் 10 மகளிர் சுய உதவிக் குழுக்கள் நியாய விலைக் கடைகளை நடத்திக் கொண்டிருக்கின்றன என்ற தகவலைச் சொல்கிறேன்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்குப் பணிவான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. அரசன்.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களிடத்திலே நீண்ட காலமாக இந்தக் கேள்வியைக் கேட்கவேண்டுமென்று கருதிக்கொண்டிருந்தேன். பாலக்கோடு, சோழவந்தான், மன்னார்குடி, கரூர், சேலம்–2 ஆகிய தொகுதிகளில் என்ன special ரக அரிசி வழங்கப்படுகிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வழங்கப்படுகிற அரிசி எல்லா இடங்களிலும் ஒரே மாதிரி மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆணையின்படி, சிறப்பான அரிசியாக, மக்கள் உண்டு மகிழ்வதற்குத் தக்க அரிசியாகத்தான் வழங்கப்படுகிறது என்ற பதிலைச் சொல்லி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 6, திரு. மு. கார்த்தி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

6—

திருக்கோயில் சீரமைப்பு

***65518—திரு. மு. கார்த்தி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம்–2–வது தொகுதி, சின்ன திருப்பதி திருக்கோயிலைச் சீர் செய்ய அரசு முன்வருமா?